இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 159 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – தை 06 – செவ்வாய்க்கிழமை 20 ஜனவரி 2026 – மதுரை 10 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 159 : Thiruvalluvar Year - 2057 - Thai 06 - Tuesday 20 January 2026 - Madurai 10 Pages ₹ 5.00

### ஒன்றிய விசாரணை அமைப்புகள்

## ஜனநாயகத்தை சீர்குலைக்கின்றன!

### உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியிடம் மம்தா கோரிக்கை!



புதுடெல்லி, ஜன. 20- ஒன்றிய அமைப்புகளிடம் இருந்து ஜனநாயகத்தை காப்பாற்றுமாறு உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி சூர்ய காந்திடம் மேற்குவங்க முதல்வர் மம்தா பானர்ஜி வலியுறுத்தியுள்ளார்.

கொல்கத்தா உயர்நீதிமன்றத்தில் நடைபெற்ற விழாவில், தலைமை நீதிபதி சூர்ய காந்த் பங்கேற்ற நிலையில், மேடையில் உரையாற்றிய முதல்வர் மம்தா பானர்ஜி, ஒன்றிய விசாரணை அமைப்புகள், அரசியல் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படுவதாக குற்றம்சாட்டினார்.

மேலும், ஜனநாயகத்தை ஒன்றிய விசாரணை அமைப்புகள் சீர்குலைக்கின்றன என்றும் விமர்சித்தார். அமலாக்கத்துறை, சிபிஐ போன்ற ஒன்றிய புலனாய்வு அமைப்புகளின் தேவையற்ற தலையீடுகளில் இருந்து சாதாரண மக்களையும், நாட்டின் அரசியலமைப்பையும், ஜனநாயகத்தையும் தயவு செய்து காப்பாற்றுங்கள் என்றும், உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி சூர்யகாந்தி டம் கேட்டுக்கொண்டார்.

நீதித்துறை மட்டுமே தங்களின் கடைசி நம்பிக்கை, எனவே அரசியலமைப்பைப் பாதுகாக்க நீதிமன்றம் உடனடியாகத் தலையிட வேண்டும் என்று கூறினார்.

### பொங்கல் தொகுப்பு:

## விடுபட்டவர்களுக்கு விநியோகம்!

சென்னை, ஜன. 20 - தமிழ்நாடு முழுவதும் இதுவரை 2.15 கோடி பேருக்கு பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கப்பட்டுள்ளது. விடுபட்டவர்களும் பொங்கல் பரிசு தொகுப்பை பெற்றுக்கொள்ளலாம் என்று கூட்டுறவுத்துறை அறிவித்துள்ளது.



தமிழ்நாடு முழுவதும் 24,924 நியாயவிலைக்கடைகளில் 2 கோடியே 22 லட்சத்து 91 ஆயிரத்து 710 அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்கள், இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பத்தினருக்கு பொங்கல் பரிசுத்தொகுப்பு வழங்கும் பணி முழுவீச்சில் நடைபெற்று வந்தது. இதற்காக சுமார் 50,000க்கும் மேற்பட்ட கூட்டுறவுத்துறை பணியாளர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர்.

அதன்படி இதுவரை 2.15 கோடி அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்கள், இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பத்தினருக்கு ரூ.6453.54 கோடி ரொக்கம் வினியோகிக்கப்பட்டுள்ளது. அதாவது குறுகிய நாட்களுக்குள் 97% பணிகள் நிறைவு பெற்றுள்ளது.

மேலும், மீதமுள்ள பயனாளிகளுக்கு பொங்கல் பரிசுத்தொகுப்பு வழங்கும் பணி மீண்டும் தொடங்கப்பட்டுள்ளது. விடுபட்ட குடும்ப அட்டைதாரர்கள் பொங்கல் பரிசு தொகுப்பினை பெற்று பயன் பெறலாம் என்று தமிழக அரசின் கூட்டுறவுத்துறை அறிவித்துள்ளது.

### தமிழகம் முழுவதும்

## 35 ரயில்களுக்கு கூடுதல் நிறுத்தம்!



சென்னை, ஜன. 20 - தமிழகம் முழுவதும் 35 ரயில்களுக்குக் கூடுதல் நிறுத்தங்கள் அளிக்க இந்திய ரயில்வே உத்தரவிட்டுள்ளது.

29 விரைவு ரயில்களுக்கும், 6 பாசஞ்சர் ரயில்களுக்கும் கூடுதல் நிறுத்தங்களை வழங்க ரயில்வே வாரியம் ஒப்புதல் அளித்துள்ளது. சென்னை கோயம்புத்தூர் கோவை விரைவு ரயில், சென்னை பெங்களூரு டபுள் டெக்கர் ரயில் ஆகிய ரயில்களுக்கு திருவள்ளூர் நிலையத்தில் நிறுத்தம் வழங்கப்படவுள்ளது.

சென்னை ஜோலார்பேட்டை விரைவு ரயில் இனி அம்பத்தூரில் நின்று செல்லும். அதேநேரம் சென்னை எழும்பூர் சத்ரபதி சிவாஜி மகாராஜ் டெர்மினஸ் விரைவு ரயிலுக்கு அரக்கோணத்தில் நிறுத்தம் வழங்கப்படவுள்ளது.

மங்களூர் சென்னை சென்ட்ரல் விரைவு ரயில், திருவனந்தபுரம் சென்னை சென்ட்ரல், அகமதாபாத் சென்னை சென்ட்ரல், புதுச்சேரி காச்சிகுடா, செங்கல்பட்டு காச்சிகுடா உள்ளிட்ட ரயில்களுக்கு பெரம்பூரில் நிறுத்தம் வழங்கப்படவுள்ளன.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (19.1.2026) செங்கல்பட்டு மாவட்டம், நெம்மேலியில் நீர்வளத்துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், செங்கல்பட்டு மாவட்டத்தின் திருப்போரூர் மற்றும் திருக்கழுக்குன்றம் வட்டங்களில் பழைய மாமல்லபுரம் சாலைக்கும் கிழக்கு கடற்கரை சாலைக்கும் இடையில் கோவளம் உபவடிநிலப் பகுதியில் 5161 ஏக்கர் பரப்பளவில் 342 கோடியே 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய குடிநீர் நீர்த்தேக்கத்திற்கு "மாமல்லன் என்று பெயர் சூட்டி, நீர்த்தேக்கம் அமைக்கும் பணிக்கு அடிக்கல் நாட்டினார். இந்த நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் எ.வ.வேலு, தா.மோ.அன்பரசன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் க.செல்வம், கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.எஸ்.பாலாஜி, எஸ்.ஆர்.ராஜா, இ.கருணாநிதி, திருமதி வரலட்சுமி மதுசூதனன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், நீர்வளத்துறை செயலாளர் ஜெ. ஜெயகாந்தன், செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி தி. சினேகா, செங்கல்பட்டு சார் ஆட்சியர் திருமதி மாலதி ஹெலன், நீர்வளத்துறை முதன்மை தலைமைப் பொறியாளர் கோபாலகிருஷ்ணன், சென்னை மண்டல தலைமைப் பொறியாளர் பொதுப்பணி திலகம், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### கடந்த 5 ஆண்டுகளில் சென்னையின் முகமே மாறிவிட்டது!

# ‘மாமல்லன்’ நீர்த்தேக்கம் காலந்தோறும் வாழ்வளிக்கும்!

## புதிய குடிநீர் நீர்த்தேக்கத்திற்கு அடிக்கல் நாட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி!

**மாமல்லபுரம், ஜன. 20 - செங்கல்பட்டு மாவட்டம் மாமல்லபுரம் அருகே ‘மாமல்லன்’ புதிய குடிநீர் நீர்த் தேக்கத்திற்கு அடிக்கல் நாட்டி முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உரையாற்றும் போது, “மாமல்லன் நீர்த்தேக்கம் மக்களுக்கு காலந்தோறும் வாழ்வளிக்கும்” என்று உறுதிபட பெருமையுடன் கூறினார்.**

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (19.1.2026) செங்கல்பட்டு மாவட்டம், நெம்மேலியில் நீர்வளத்துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், செங்கல்பட்டு மாவட்டத்தின் பழைய மாமல்லபுரம் சாலைக்கும் கிழக்கு கடற்கரை சாலைக்கும் இடையில் கோவளம் உபவடிநிலப் பகுதியில் “மாமல்லன்” புதிய குடிநீர் நீர்த்தேக்கம் அமைக்கும் பணிக்கு அடிக்கல் நாட்டி ஆற்றிய உரை வருமாறு :-

கோவளம் உப வடிநிலப் பகுதியில் “மாமல்லன்” புதிய குடிநீர் நீர்த்தேக்கம் அமைக்கும் பணிக்கான அடிக்கல் நாட்டு விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கக்கூடிய உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

காற்றும், நீரும் இந்த பூமியில் இருக்கின்ற காரணத்தினால் தான், மனிதர்களும், மற்ற உயிரினங்களும் உருவாகி வாழ்கிறோம்! அதனால்தான், அய்யன் வள்ளுவர் “நீர் இன்றி அமையாது உலகு” என்று உலகப் பொதுமறையில் சொன்னார்.

அதேபோல, புறநானூறிலும் “குளம் தொட்டு வளம் பெருக்கி” என்று சொல்லி, வேளாண்மைக்கு நீர் எவ்வளவு அவசியமானது என்று சொல்லியிருக்கிறார்கள்! அதனால்தான், நீர் நிலைகளைச் சுற்றியே குடியிருப்புகள் அமைவது பழந்தமிழர் மரபு. அனைத்து வகையிலும், இயற்கையோடு இணைந்ததுதான் தமிழர் வாழ்வு. அதன் தொடர்ச்சியாகத்தான் நம்முடைய ‘திராவிட மாடல்’ அரசு நடைபெற்று வருகிறது என்பதன் அடையாளம்தான், இந்த மாமல்லன் நீர்த்தேக்கத்தின் அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

சென்னையின் வளர்ந்து வருகின்ற பகுதிகளுக்காக நம்முடைய அரசு செய்த முக்கியமான பணியாக வரலாற்றில், இந்த நிகழ்வு நினைவுகூரப்படும். பொதுவாக, சிலர் உண்மை தெரிந்தும், பலர் உண்மை தெரியாமலும், “நம்முடைய கழக ஆட்சியில், அணைகளை கட்டவில்லை” என்று ஒரு பொய்யை சொல்லுவார்கள். ஆனால், உண்மை நிலை என்ன? நம்முடைய முத்தமிழிலும் கரைகண்ட தலைவர் கலைஞர் அவர்கள் தமிழ்நாட்டின் நீர் நிலைகளைக் காக்கக்கூடிய செயல்பாடுகளையும் அதிகமாக செய்திருக்கிறார்.

**தமிழ்நாட்டில் கழக ஆட்சியில் 43 அணைகள் கட்டி சாதனை!**

1967ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்ததில் இருந்து, 2011 வரை நம்முடைய தமிழ்நாட்டில், 43 அணைகள் கட்டப்பட்டிருக்கிறது. அதைப் பட்டியலோடு பெயர்களோடு சொல்ல வேண்டும் என்று சொன்னால்,

- உப்பாறு
- சிற்றாறு1
- சிற்றாறு2
- பெருவாரிப்பள்ளம்
- சோலையாறு
- பொன்னணியாறு
- கருப்பாநதி
- இராமநதி
- பரப்பலாறு
- மேல்நீராறு
- பிளவக்கல் கோவிலாறு
- பிளவக்கல் பெரியாறு
- குடகணாறு
- பாலாறு பொருந்தலாறு
- குண்டேரிப்பள்ளம்
- வரதமாநதி
- வட்டமலைகரை ஓடை
- மருதாநதி
- வரட்டுப்பள்ளம்
- கீழ்நீராறு
- குண்டாறு
- குதிரையாறு
- ஆணைக்குட்டம்
- இராஜாத்தோப்பு
- சோத்துப்பாறை
- மோர்தானா நீர்த்தேக்கம்
- அடவி நயினார்
- பொய்கையாறு
- வடக்கு பச்சையாறு
- சாஸ்தா கோவில்
- கடனா நதி
- நம்பியாறு
- சண்முகா நதி
- மிருகண்டா நதி
- கமண்டலநதி
- வண்டல் ஓடை
- ஆண்டியப்பனூர்
- நல்லதங்காள்
- நங்கஞ்சியாறு
- சிறுமலையாறு
- இருக்கன்குடி
- குப்பநத்தம்
- மாம்பழத்துறை ஆறு

- இப்படி, 43 நீர்த்தேக்கங்களை உருவாக்கியவர் தான் நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்!

**நீர்வளம் பெருக்க பல்வேறு நடவடிக்கைகள்!**

நம்முடைய திராவிட மாடல் ஆட்சி அமைந்து, நீர்வளம் பெருக்க பல நடவடிக்கைகளை நாம் தொடர்ந்து எடுத்துக் கொண்டு வருகிறோம்.

- கடந்த ஐந்து வருடமாக மேட்டூர் அணை முழு கொள்ளளவு எட்டப்பட்டு, குறித்த நேரத்தில் திறந்து வைத்திருக்கிறோம்.
- 2021-25 ஆகிய ஐந்து ஆண்டுகளில், காவிரி டெல்டா பகுதிகளில், தூர்வாரக்கூடிய பணிகள் 459 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்றிருக்கிறது. 24 ஆயிரத்து 833 கிலோமீட்டர் நீளத்திற்கு சிறந்த முறையில், இவை செயல்படுத்தப் பட்டிருக்கிறது. இதனால், கடைமடை வரை விவசாயிகள் பயனடைந்தார்கள்.
- மாநிலம் முழுவதும் புதிதாக 121 தடுப்பணைகள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

### புதிதாக பெயர் சேர்க்க 13 லட்சம் பேர் விண்ணப்பம்!

## வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க ஜன.30 வரை அவகாசம்!

### இறுதி வாக்காளர் பட்டியல் பிப்ரவரி 17-ஆம் தேதி வெளியிடப்படும்!

சென்னை, ஜன. 20 - தமிழ்நாட்டில் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க, திருத்தம் மேற்கொள்ள ஜனவரி 30ஆம் தேதி வரை விண்ணப்பிக்கலாம் என காலஅவகாசத்தை நீட்டித்து தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

தமிழ்நாட்டில் கடந்த டிசம்பர் 19ம் தேதி வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டது. அதில் 97 லட்சத்து 37 ஆயிரம் வாக்காளர்களின் பெயர்கள் நீக்கப்பட்டன. வாக்காளர்களின் எண்ணிக்கை 6 கோடியே 41 லட்சத்தில் இருந்து, 5 கோடியே 43 லட்சமாக குறைந்தது. வரைவு வாக்காளர் பட்டியலில் இடம் பெறாதவர்கள், வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க பல்வேறு கட்டங்களாக சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டன.

அவகாசம் முடிவடையும் நிலையில், வாக்காளர் பட்டியலில் புதிதாக பெயர் சேர்க்க 13 லட்சத்திற்கும் மேற்பட்டோர் பேர் விண்ணப்பித்துள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்தது.

இந்நிலையில், தமிழ்நாட்டில் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க, திருத்தம் மேற்கொள்ள வருகிற ஜனவரி 30ஆம் தேதி வரை விண்ணப்பிக்கலாம் என காலஅவகாசத்தை நீட்டித்து தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது. பிப்ரவரி 17ம் தேதி இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட உள்ளது.

### கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் – இன்று

## தி.மு.க. மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டம்!

### பொதுச்செயலாளர் துரைமுருகன் அறிவிப்பு!



கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தலைமையில் **“தி.மு.க. மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டம்” இன்று** (20.01.2026 - செவ்வாய்க்கிழமை) மாலை 6.30 மணி அளவில், சென்னை, அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் நடைபெறும்.

அதுபோது மாவட்டக் கழகச் செயலாளர்கள் மற்றும் கழக நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**பொருள் : 2026 சட்டப்பேரவைத் தேர்தல்**

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.